

திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது திருவுருவச் சிலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை மற்றும் கழக முன்னோடிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கோ.கண்ணன், இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், விஜயலட்சுமிரமேஷ், நிர்மலாவேல்மாறன், சு.ராஜாங்கம், ஏ.ஏ.ஆறுமுகம் உட்பட பலர் உள்ளனர்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் முழுவுருவ வெண்கல சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் தலைமையில் கொண்டாடப்பட்டது!

கன்னியாகுமரி, ஜூன் 4 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (03.06.2026-புதன்கிழமை) காலை 9.00 மணியளவில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரி, மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் முழுவுருவ வெண்கல சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின் கழக கொடியேற்றி பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சியில் நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் எஸ்.ஆஸ்டின், தலைமைக் கழக கள ஆய்வுக் குழு உறுப்பினர் சுபா. சந்திரசேகர், மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என். தில்லைசெல்வம், கழக தணிக்கை குழு உறுப்பினர் என்.சுரேஷ்ராஜன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைத் தலைவர் வி.ஜோசப் ராஜ், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் எப்.எம்.இராஜரெத்தினம், மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், மாவட்ட துணை செயலாளர் ஏ.ஆர். பூதலிங்கம், நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், பகுதி செயலாளர் இ.ஜவகர் உட்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொது மக்களும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# கலைஞரின் 103வதுபிறந்தநாள் விழா செம்மொழி நாளாக கொண்டாட்டம்!

## செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

செஞ்சி, ஜூன் 4 -

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103வதுபிறந்தநாள் விழா செம்மொழி நாள் கொண்டாட்டம்செஞ்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர்கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி 1000நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்

இந்தியாவில் பல்வேறு குடியரசுத் தலைவர்களையும் பிரதம மந்திரிகளையும் உருவாக்கி சுதந்திர தினத்தில் சட்டமன்றதலைமைச் செயலகத்தில் முதலமைச்சர்களுக்கு தேசிய கொடியினை ஏற்றும் உரிமையை பெற்று தந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வதுபிறந்த நாள் விழாவை செம்மொழி நாளாக சீரும் சிறப்பு மாகவிழுப்புரம் வடக்கு மாவட்டம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103 வது பிறந்த நாளைசெம்மொழி நாள் விழாவாக செஞ்சி கூட் ரோட்டில் நடைபெற்றது.

செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமை தாங்கினார்.

செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார் முன்னிலை வகித்தார். செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர்செஞ்சி மஸ்தான்தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தமுத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் 1000 நபர்களுக்குஅறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நகர பொருளாளர் நெடுஞ்செழியன், பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் ஜான் பாஷா , சங்கர், சிவகுமார், நூர்ஜகான்ஜாபர், மோகன், சீனிவாசன், பொன்னம்பலம்,ஒன்றிய அவைத் தலைவர் வாசு, மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை,மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் சிங்கம் சேகர் ,ஜே. எஸ். சர்தார், சிவகுமார்,ஜி. டி. தனசேகரன்,முன்னாள் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ரிஸ்வான், தொண்டரணி பாஷா, என்.ஆர்.பேட்டைன்னால் ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன், துணைத் தலைவர் ராமு,சம்பத்குமார், சந்திரன், கோகுல், உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளில், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர், இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. தலைமையில் பேரணியாகச் சென்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. உடன் வானூர் சட்டமன்ற உறுப்பினர் தி.கௌதம், இரா.கண்ணப்பன், பிரேமா குப்புசாமி, இரா.சக்கரை, எஸ்.வெற்றிவேல், எஸ்.எஸ்.ஜெயமூர்த்தி, பா.தெய்வசிகாமணி, தே.முருகவேல், வி.ஜி. பிரபாகரன், கப்பூர் ராஜா, B.சந்திரசேகரன், PKT.முரளி, கு.செல்வமணி, வே.கணேசன், கோ.பாஸ்கர், சீனு. செல்வரங்கம், ச.புஷ்பராஜ், பா.ஜீவா, த.சுவைசுரேஷ், தமிழ்செல்வி பிரபு, ஆர்.எஸ்.வாசன், T.R.இளங்கோவன், ஏ.சச்சிதானந்தம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# தஞ்சையில் கலைஞர் பிறந்த நாள் விழா!

தஞ்சை, ஜூன் 4 –

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கும், பழைய பேருந்து நிறுத்தம் அருகே உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலைக்கும் மாவட்ட கழக செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

இதில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், ச.முரசொலி எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், து.செல்வம், மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# யாரை திருப்திப்படுத்த கலைஞரின் படம் நீக்கப்பட்டது?



**மனுஷ்ய புத்திரன்**
*முன்னாள் தலைவர் சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு*

தமிழ்நாட்டில் கல்வியையும் பொது நூலகத்துறையையும் பெரும் இயக்கமாக வளர்த்தெடுத்த கலைஞரின் பிறந்த தினத்தன்று தமிழ்நாட்டின் புகழ்பெற்ற நூலகம் ஒன்றிலிருந்து கலைஞரின் புகைப்படம் அகற்றப்பட்டதைப் பற்றி பேச வேண்டிய அவலம் நிகழ்ந்துள்ளது.

ஜுன் 2ஆம் தேதி மாலை சென்னை தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலக அரங்கில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் பங்கேற்ற நிகழ்ச்சி ஒன்றில் அரங்கத்தில் மற்ற தலைவர்களின் படங்களோடு வைக்கப்பட்டிருந்த கலைஞரின் படம் அகற்றப்பட்டு பின்னர் ஊடகங்கள் கேள்வி எழுப்பியவுடன் அவசர அவசரமாக திரும்ப மாட்டப்பட்டது.

அந்த அரங்கில் எப்போதும் எம்.ஜி.ஆரின் படமும் இருந்திருக்கிறது. கலைஞரின் படமும் இருந்திருக்கிறது. அங்கு கலைஞரின் படம் இருப்பதில் யாருக்கு என்ன பதற்றம்? யாரை மகிழ்ச்சிப்படுத்த யார் செய்த செயல் இது?

பள்ளிக்கல்வித்துறை அமைச்சரை ஒரு பேச்சாளராக நான் நீண்ட நாள் அறிவேன். அவரே அடிப்படையில் ஒரு கலைஞர் பற்றாளர்தான். புத்தகங்களோடும் தொடர்புடையவர் அவர். அவர் விருப்பப்படி இது நடந்திருந்தால் அது கண்டனத்திற்குரியது. அப்படி இல்லாவிட்டால் இது யாருடைய விருப்பப்படி நடந்தது என்பதற்கு அவர் துறைசார்ந்த விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்.

பொதுநூலகங்கள், நூலக அரங்குகள் தமிழ்நாட்டின் அறிவுசார் பாரம்பரிய பொதுசொத்துகள் ஆகியவற்றிற்கு எல்லா தலைவர்களுமே பங்களித்திருக்கிறார்கள். அவை உரிய வகையில் நினைவு கூரப்பட வேண்டும்.

அண்ணா நூற்றாண்டு நூலகத்தை அ.தி.மு.க. ஆட்சியில் பாழடையவிட்டபோது நீதிமன்றம் கடும் கண்டனங்களை தெரிவித்தது. அந்த அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் கலைஞரின் பெயர் இருந்த கல்வெட்டை அன்றைய ஆட்சியாளர்கள் செடிகளை வைத்து மறைத்தார்கள். இதுபோன்ற செயல்கள் வரலாற்றை அழிப்பதுமட்டுமல்ல, அரசியல் மாண்புகளுக்கும் எதிரானது.

கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம் உட்பட பல பிரம்மாண்ட மான நூலகங்கள் உருவாக்கப்பட்டன. தமிழ்நாட்டிலுள்ள ஏராளமான நூலகங்கள் புதுப்பிக்கப்பட்டதுடன் இளைஞர்களின் எதிர்கால கனவுகளுக்கு ஒளியூட்ட அறிவுசார் மையங்களும் திறக்கப்பட்டன.

இந்தப் பங்களிப்பையும் சாதனைகளையும் எவராவது மறுக்க முடியுமா?

நான் சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு தலைவராகப் பொறுப்பு வகித்த காலத்தில்தான் தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலகம் அனைத்து நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டு சென்னையின் மையத்தில் இது ஒரு மிகச் சிறந்த அரங்கமாக திகழ்ந்து வருகிறது.

பொது நூலகத்துறையை அரசியல் காழ்ப்புணர்ச்சிகளற்று வளர்த்தெடுப்பதுதான் எந்த அரசிற்கும் பெருமை சேர்ப்பதாக இருக்கும்.

கலைஞரின் படத்தை ஒரு பொதுநூலக அரங்கிலிருந்து அகற்றுவதன் வழியாக அவரை மக்கள் இதயங்களிலிருந்து அகற்ற முடியாது. தமிழ்நாட்டின் பொதுநூலக வரலாற்றிலிருந்தும் அகற்ற முடியாது.

# நெய்வேலி நகர பகுதியில் கலைஞர் 103வது பிறந்த நாள் விழா!

## சபா.இராசேந்திரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்!

கடலூர் , ஜூன் 4 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு, கடலூர் மேற்கு மாவட்டம் நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு இடங்களில்தி.மு.க.மற்றும் தொ.மு.ச, சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

நெய்வேலி நகர தி.மு.க, மற்றும் தொ.மு.ச,சார்பில் , கலைஞர் சதுக்கத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு ,

நெய்வேலி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் அவர்கள் கழக நர்வாகிகளுடன் இணைந்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதன் தொடர்ச்சியாக, நெய்வேலி போக்குவரத்து பணிமனையில் போக்குவரத்து தொ.மு.ச. ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சபா.இராசேந்திரன், கலைஞர் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் அங்கு திரண்டிருந்த தொழிலாளர்கள் மற்றும் தொண்டர்களுக்கு இனிப்புகள் வழங்கி மகிழ்வித்தார்.

மேலும், வடக்குத்து மற்றும் இந்திரா நகர் ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்ற கலைஞர் பிறந்த நாள்விழா நிகழ்ச்சிகளிலும் சபா.ராஜேந்திரன் கலந்து கொண்டார். அங்கு கலைஞர் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய அவர், அப்பகுதி மக்கள் மற்றும் தொண்டர்களுக்கு அன்னதானம் வழங்கி சிறப்பித்தார்.

நிகழ்ச்சிகளில் கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் தண்டபாணி, முன்னாள் பண்ருட்டி ஒன்றிய பெருந் தலைவர் சபா.பாலமுருகன், நெய்வேலி நகர செயலாளர் குருநாதன், குறிஞ்சிப் பாடி மேற்கு ஒன்றிய செயலாளர் குணசேகரன், பண்ருட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் சந்தோஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.அறிவழகன், நகர அவைத் தலைவர் நன்மாரபாண்டியன், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் வீர. ராமச்சந்திரன், ரவி நாசர், மதியழகன், தொமுச தலைவர் ஞானஒளி, பொருளாளர் அப்துல் மஜீத், அலுவலக செயலாளர் சீனிவாசன், சிவன்தான்செட்டி, ஆடலரசன், ஆனந்த் ஜோதி, சடையப்பன், வெங்கடேசன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் செல்வகுமார், சுமதி, நந்தகோபால், கவிதா, ஜனார்த்தனன், பிச்சையா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஷ், நகர இளைஞரணி அமைப்பாளர் ஸ்டாலின், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய இளைஞரணி செயலாளர் பாக்யராஜ், VG.ராமலிங்கம் தர்மலிங்கம், இலங்கேஸ்வரன், லோகநாதன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் ஸ்டாலின் மற்றும் நகர கழக ஒன்றிய கழக நிர்வாகிகள் தொமுச நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில் உள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, கழக கொடியேற்றி இனிப்புகள் , அன்னதானம், வழங்கி மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் டி.என்.முருகன், செல்வராஜ், பூக்கடை கணேசன், பி.வி.ஆர்.சு.விசுவநாதன், அஞ்சுகம் கணேசன், ஓம்சிவசக்திவேல், ஜோதி, ஜோதி, சுரேஷ்பாபு, இரா. கிருஷ்ணராஜ், அன்பழகன், விஜயபாபு, நிர்மல்ராஜ், சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் வழிகாட்டுதலின்படி, தியாகதுருகம் தெற்கு ஒன்றியம், மடம் ஊராட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் புவனேஸ்வரி பெருமாள் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். மேலும் பொதுமக்களுக்கு இனிப்புகள் அன்னதானம் வழங்கினார். இதில் ஊராட்சி மன்ற தலைவர், வார்டு உறுப்பினர்கள், இளைஞரணி நிர்வாகிகள், மகளிரணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.